1984 மார்ச் 8]

ஆசிரியர்களுக்கான பணிவிதிகளை எதிர்த்து வழக்குத் தொடர்தல்.

* 64. வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசினர் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கான பணி விதிகளில் (Service Rules) எதையேனும் எதிர்த்து, 1981-82-ல் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், மொத்தம் எத்தனை வழக்குகள் தொடரப்பட்டன ?

(உ) எந்தெந்த விதிகளை எதிர்த்து இவ்வாறு வழக்கு தொடரப்பட்டுள்ளன ?

(எ) இவ்வழக்கின் மீது தீர்ப்பளிக்கப்பட்டிருந்தால் தீர்ப்பின் சாராம்சம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) 9 வழக்குகள்.

(உ) தமிழ்நாடு மேல்நிலைக் கல்விப் பணி தனி விதி 2-ஐ எதிர்த்து வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

(எ) வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டன. எனினும் 'ஏ' மற்றும் 'பி' பிரிவு ஒருங்கிணைப்புப்படி, 2—11—1978 நிலவரப்படி தயார் செய்யப்பட்ட முன்னுரிமை பட்டியல்படி, பாதிக்கப்பட்டவர்களுக்கு பதவி உயர்வு அளிக்க வேண்டுமென்று தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

டாக்டர் இரா. சனார்த்தனம் : அந்தத் தீர்ப்பு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறதா? விரைவில் நடைமுறைப்படுத்தவிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தீர்ப்பில் உள்ள குறிப்பு விளக்கத்திற்காக 'ரெவ்யூ பெட்டிஷன்' தாக்கல் செய்யும்படி அரசு வழக்கறிஞர் பள்ளிக் கல்வி இயக்குநரால் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.